**அபிவிருத்தி, வறுமைத் தணிப்பு மற்றும் மனித உரிமைகள்**

***மாணிக்யா கொடிதுவக்கு***

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னைநாள் செயலாளர் நாயகம் ஒரு முறை இவ்வாறு குறிப்பிட்டார் ''சர்வதேச சந்தைச் சக்திகளினால் நலனையும் பரந்த சுபீட்சத்தினையும் உருவாக்க முடியும். ஆனால் அங்கு அபிவிருத்தி சமநிலையற்று இருக்குமாயின் அதன் விளைவாக அரசியல் அமைதியின்மை மற்றும் ஸ்திரத்தன்மையற்ற நிலையின் ஆபத்து அதிகரிக்க முடியும்'' இந்தச் சூழ்நிலையானது இலங்கை உட்பட உலகிலுள்ள அனைத்து பிரதேசங்களிலும் உண்மையானது என மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

திருப்தியான பேண்தகு நிலையை உறுதிப்படுத்துவதற்கு வளங்கள் எவ்வாறு பயனுறுதி மிக்கதாக முகாமை செய்யப்படல் வேண்டும் என்பது பற்றிய விஞ்ஞானமொன்றாக இருந்த பொருளியியல், அதிகூடிய இலாபத்தைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு முறைமை மற்றும் பாதையின் இருமருங்கிலும் காணப்படும் உண்மையான அபிவிருத்திக்கான விஞ்ஞானமொன்றாக விரைவாக மாறியுள்ளது. அதன் மூலம் அபிவிருத்தி முயற்சிகள் கஷ்டப்பட்டு பிரயத்தனம் செய்யவேண்டியதல்ல எனச் சொல்லவில்லை. எவ்வாறாயினும், அவ்வாறான முயற்சிகள் இடம்பெற்றுள்ள அல்லது இடம்பெறும் சந்தர்ப்பங்களில் அத்தகைய அபிவிருத்தியிலிருந்து சிறப்பாக நன்மைபெறுவதிலிருந்து பெண்கள் போன்ற மக்கள் குழுக்களின் வெளியேற்றத்திற்கு காரணமாகும் பல்வேறுபட்ட சமநிலையற்ற நிலைமைகள் உருவாகும்.

பொருளாதார கோட்பாடுகள் குறிப்பிடுவது போன்று வளர்ச்சி என்பது கொள்கையளவில் வறுமைத் தணிப்பினை ஏற்படுத்தும் இது "trickle-down effect" என அழைக்கப்படும். எனினும் யதார்த்தத்தில் மிகவும் மாறுபட்டவிடயமே காணப்படுகின்றது. இலங்கையினைப் பொறுத்தவரையில், வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் சனத்தொகையானது குறிப்பிடத்தக்களவு குறைவடையவில்லை 1990/1991 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்ந்த 21.8% ஆன சனத்தொகையானது 2002 ஆண்டுடன் ஒப்பிடுகையில் 19.2 ஆக இருந்தது. அதே நேரம் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளச்சியானது ஏறக்குறைய 5% இலிருந்து 7% இற்கு கூடிய வளச்சியினை பதிவாக்கியுள்ளது.

ஒரு சாரார், வர்த்தகமும் வளர்ச்சியும் வறுமை ஒழிப்பிற்கான முதன்மை வழிமுறைகள் என குறிப்பிடும் அதேவேளை, மறுசாரார் வர்த்தகம் மற்றும் பொருளாதார வளச்சியானது வறுமை ஒழிப்பிற்கு ஒருபோதும் முதன்மை வழிமுறையாக இருக்கமாட்டாது என வாதிடுகின்றனர். முதன்மை வழிமுறையாக இருக்கமாட்டாது என வாதாடுபவர்கள் சமூகத்தின் அடிமட்ட கட்டமைப்புக்குச் சென்றுள்ள – விற்பனைக்கு மாற்றமாக வளங்களில் பரிமாற்றம் - அதே வேளை முதன்மை வழிமுறை என்போர் வளர்ச்சியை மிக இலகுவாக மேம்படுத்துவதற்கு நாடுகின்றனர்.

யதார்த்தநிலையானது இவை இரண்டுக்குமிடையில் காணப்படுகின்றது. வர்த்தகமானது அபிவிருத்தியை ஊக்குவிக்க முடியும், அதன் மூலம் வறுமை ஒழிப்பினை நோக்கி செயலாற்றலாம், ஆனால் அவ்வாறு செய்யும் பொழுது அத்தகைய அபிவிருத்தி விளைவுகளானது வர்த்தகப் பங்காளிகளினால் அடையப்படும் வகையில் ஒழுங்கு படுத்தப்படுதல் வேண்டும்.

இதுதான் வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான பொருளாதார கண்ணோட்டமாகும்.

எவ்வாறாயினும், அன்மைக்காலமாக வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி பற்றிய விவாதத்தில் வித்தியாசமான காரணியொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதுவே மனித உரிமைகள் பற்றிய காரணியாகும்.

வர்த்தகம் மற்றும் அபிவிருத்தியின் மனித உரிமைக் கண்ணோட்டமானது இற்றைக்கு பல தசாப்தங்களாக கலந்துரையாடப்பட்டுள்ளது, ஆனால் இது தொடர்பில் இலங்கையில் மிகவும் சிறிய பணியே நடைபெற்றுள்ளது. எனவே வர்த்தக மற்றும் அபிவிருத்தியின் மனித உரிமைக் கண்ணோட்டமானது இங்கு ஊழியர் உரிமைகள் போன்ற மிகவும் சிறியளவிலான வரையறுக்கப்பட்ட எண்ணக்கருவாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டு விளங்கப்பட்டுள்ளது.

**வர்த்தகம், அபிவிருத்தி மற்றும் மனித உரிமைகள்**

இன்று பெரும்பாலான அனைத்து விடயங்களிலும் மனித உரிமைகள் பேசப்படும் ஒரு விடயமாக மாறியுள்ளது. மனிதர்களை மதித்தல் அவர்களது கௌரவம் என்பன மனித உரிமைகளின் அச்சாணிகளாகும். எனவே மனித உரிமைகளின் விழுமியங்களை சேர்த்துக் கொள்வது வர்த்தகம் மற்றும் அபிவிருத்தியுடன் இணைந்ததாக இருந்தது, தற்பொழுதும் இருக்கின்றது.

இந்த அங்கீகாரமானது 1986 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட அபிவிருத்திக்கான உரிமைகள் பற்றிய ஐக்கிய நாட்டுப் பிரகடணத்தின் விளைவாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். இப்பிரகடணத்தின் முக்கியவிடயம் அபிவிருத்தியின் கருப்பொருளாக மனிதன் ஒருவன் இருக்கின்றான் என்பதாகும். எனவே அபிவிருத்திக் கொள்கையினை அமுல்படுத்துவது அபிவிருத்தியின் முக்கிய பயனுகரிகளாக மனிதனை மாற்ற வேண்டிய தேவையுடையதாக இருக்கிறது. அரசினால் பாரிய வகையில் பணிகள் நிறைவேற்றப்படவேண்டியுள்ளது. அரசு-மத்தி அமைப்புக் காணப்படுவதினால் இப்பிரகடணம் விமர்சிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், ஆரம்பத்தில் உருவாக்கப்பட்ட பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைக்களுக்கான சர்வதேச சமவாயமானது (ICESCR) மிகவும் பரந்து பட்டளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் உணவு, சுகாதாரம், வதிவிடம், கல்வி, தொழில் மற்றும் சமூகப்பாதுகாப்பு தொடர்பான ஒவ்வொரு மனிதனதும் உரிமைகளை உறுதிப்படுத்துவது மீதான அரசின் ஆரம்ப பொறுப்புடைமையை ஏற்றுக்கொள்ளச் செய்துள்ளது.

தற்பொழுதிருக்கும் சர்வதேச பொருத்தனைகள் மற்றும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் என்பனவற்றுக்கு மேலதிகமாக வர்த்தகம் தொடர்பான மனித உரிமைகள் பற்றிய கண்ணோட்டத்தின் மீதான சிவில் சமூகத்தின் கவனம் 1998 இல் இடம்பெற்ற பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பில் வர்த்தக பேரம்பேசுநர்களினால் கலந்துரையாடப்பட்டிருந்த முதலீடு தொடர்பான இருதரப்பு உடன்னடிக்கை (Multilateral Agreement on Investment) மூலம் ஊழியர் உரிமைகளுக்கான அமைப்புகளின் கூட்டு ஒன்றினால் வெளிப்படுத்தப்பட்ட போது அது மிகவும் பயனுள்ள ஒன்றாகப் பெற்றுக்கொள்ளப்பட்டது. அத்தகைய உடன்படிக்கையானது ஊழியர்களது பாதுகாப்பு போன்ற பொது மக்கள் அக்கறைமீதான கவனத்திற்கு மேலாக வெளிநாட்டு முதலீட்டாளர்களின் (பாரிய கூட்டுத்தாபனங்கள் உள்ளடங்களாக) உரிமைகளுக்கு முன்னுரிமை வழங்கும் வகையில் கலந்துரையாடப்பட்டிருந்தது தெரியவந்திருந்தது.

இந்த பேச்சு வார்த்தை இடம்பெற்று சில மாதங்களின் பின்னர், இதனால் பாதிக்கப்படும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் மூடிய கதவுகளின் பின்னால் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கிடையில் சர்வதேச வர்த்தகக் கொள்கை முதன் முதலாக பேரம்பேசப்பட்டுள்ளது என்ற விடயம் மிகவும் விரிவாக விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் மனித உரிமைகள் பற்றிய விடயங்கள் தேவையான அளவு கவனத்திற்கெடுக்கப்படவில்லை என்பதுடன் சில தசாப்தங்களுக்கு மேலாக சில சமூகக் குழுக்களும் வாதப்பிரதிவாதங்களில் ஈடுபட்டுள்ளதை இந்த ஆர்வமானது வர்த்தகக் கொள்கைகளில் மனித உரிமைகள் பற்றிய ஆர்வத்தை சேர்த்துகொள்வதற்கு 1998 மே மாதத்தில் உலக வர்த்தக அமைப்பினால் (WTO) கூட்டப்பட்ட பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைக்கான குழுவின் (CESCR) பிரகடணத்தை அவ்வாறே ஏற்றுக்கொள்வதாக அமைந்தது.

**வறுமையும் மனித உரிமைகளும்**

வறுமையானது தனிப்பட்டவர்களின் தோல்வியினை அடிப்படையாகக் கொண்டிருக்கும் என தெளிவாக விளங்கப்பட்டுள்ளது. மனித உரிமைகளுமக்கான உயர்ஸ்தானிகரின் ஐ.நா அலுவலகத்திற்கு அமைவாக இது பிரதானமாக நோக்கப்படுவது அவசியமாகிறது *''வலுவூட்டாமை மற்றும் புறந்தள்ளுதல் என்பவற்றின் விளைவொன்றாகும்''.*

நாடொன்றினால் பெறப்படும் பொருளாதார நன்மைகளில் அதன் பிரசைகள் அனைவரும் உள்வாங்கப்படுவதுடன் வலுவூட்டப்படவும் வேண்டும் என்பதை உறுதிப்படுத்தல் என்ற முக்கியமான பொறுப்பு அரசொன்றின் மீது உள்ளது என்பது தெளிவானதொரு கடப்பாடாகும். அபிவிருத்திக்கான உரிமைகள் மீதான ஐ.நா. பிரகடணத்தினால் பரிந்துரைக்கப்பட்டவாறு அபிவிருத்தி என்பது தவிர்க்கமுடியாத மனித உரிமையொன்று என ஏற்றுக்கொள்ளப்பட்டால் இது வர்த்தக பேச்சு வார்த்தைகளின் ஒவ்வொரு கட்டத்திலும் உரிமைமேலோங்கி இருக்க வேண்டும் என்பதினை உறுதிப்படுத்துவது நாடுகள் மற்றும் சர்வதேச உலகத்தின் மீதான கடப்பாடுகளை இன்னும் அதிகரிக்கும்.

வறுமை தனிப்பானது அபிவிருத்தியின் பிரதான நோக்கமாகவும் அபிவிருத்தி கொள்கையாகவும் இருக்க வேண்டிய தேவையை மனித உரிமைகள் வலியுறுத்துகின்றன. எனவே, மேற்குறிப்பிடப்பட்ட பொருளியற் கோட்பாடுகளை மனித உரிமைகள் கோட்பாடுகளுடன் இணைப்பதற்கு வர்த்தகம் மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பன அபிவிருத்தியின் இலக்கு என்பதனைவிட அதற்கான சாதனமென்றாக நோக்கப்பட வேண்டியுள்ளது.

மனித உரிமைகள் விழுமியங்களுடன் உள்ளடங்கியுள்ள அபிவிருத்தியானது வறுமைத் தணிப்பின்பால் செலுத்தப்படவேண்டிய தேவையுள்ளது. இதற்கு மறுதலையாக மனித உரிமைகள் விழுமியங்களுடன் கூடிய வர்த்தகம், வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்கு, குறித்த அரசானது அனைத்து அரசுகளினாலும்

ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச பெறுமானங்கள் தொடர்பான முறைமையொன்றுடன் வர்த்தகத்தை மேற்கொள்வதற்கு கடப்பாடுடையது என்பதை உறுதிப்படுத்த கொள்கைகளும் தேவைப்படுகின்றது.

நாடுகளுக்கிடையில் நடைமுறையிலிருக்கும் வர்த்தக உடன்படிக்கைகள் அவற்றில் காணப்படும் பல்வேறுபட்ட கடப்பாடுகளின் காரணமாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் உள்ள மக்களின் உரிமைகளைப் பாதிக்கின்றது. எனவே, வர்த்தக நீதியானது அடையப்படவேண்டியுள்ளதுடன் நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள் அனைத்து மட்டங்களிலும் அடையாளம் காணப்பட்டு இல்லாதொழிக்கப்பட வேண்டும்.

**வர்த்தக நீதி**

வர்த்தக நீதியானது அபிவிருத்தியிலிருந்து மிகவும் குறைந்த நன்மையைப் பெறும் உலக வர்த்தகத்தின் நியதிகள் மற்றும் நடைமுறைகளை மாற்றுவதற்கான அழைப்புப் பிரசாரமாக உலகில் சர்வதேச கேள்வியை ஏற்படுத்தியுள்ளது. பல்வேறுபட்ட பிரசித்த கோரிக்கைகளை அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் முன்வைத்துள்ளன, தொடர்ந்தும் முன்வைத்து வருகின்றன என்பது பாரிய சந்தை வழிவகைகளை அடைந்து கொள்வதற்காகும். உயர் தீர்வைகளை விதிக்காது பரந்த சந்தை வழிமுறைகள் வழங்கப்படுமாயின் இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் இயல்பிலேயே நன்மையடைந்து கொள்ளும்.

பாரிய சந்தை வழிவகைகளுக்கான கோரிக்கைகளுடன் வர்த்தக நீதம் தொடர்பான ஆர்வலர்கள் வலுக்கட்டாய சுகந்திர சந்தை, பதுக்கல், பல்தேசிய மேலாதிக்கம், தனியார் புலமைச்சொத்து உரிமைகள் மற்றும் தற்பொழுதிருந்துவரும் சுரண்டலுக்குட்பட்ட ஊழியர்களின் நிலைமை என்பவற்றுக்கு எதிராகவும் எதிர்ப்புத் தெரிவித்துவருகின்றனர்.

இந்த நீதமற்ற வர்த்தக நடைமுறைகளை சுருக்கமாக விளக்குவதாயின், கடந்த காலங்களில் அபிவிருத்தியடைந்த நாடுகள் அவர்களது சந்தையை எங்கு, எந்தளவு தாராளமயமாக்குவது என்பது பற்றிய தெரிவுக்கான வாய்ப்பினைக் கொண்டிருந்தனர். ஆனால் இன்று அபிவிருத்தியடைந்த நாடுகளின் வர்த்தக பங்காளிகள் மற்றும் அல்லது உலக வர்த்தக அமைப்பு (WTO) போன்ற பல்தரப்பு நிறுவனங்களின் அமுக்கத்தின் காரணமாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு இவ்வாறான சந்தர்பங்கள் வழங்கப்படுவதில்லை.

இரண்டாவதாக, அபிவிருத்தியடைந்த நாடுகளினால் செய்யப்படும் ஏற்றுமதிப் பொருட்களுக்கான பாரிய மாற்றீடு அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் கொட்டப்படுவதுடன் உள்ளூர் விலைகள் வீழ்ச்சியடைந்து, போட்டித்தன்மை சமமற்றநிலையிலுள்ளது. இதன் விளைவாக உள்ளூர் உற்பத்தியாளர்கள் இழப்புகளைச் சந்திக்கின்றனர். இந்த மாதிரியான சந்தர்ப்பம், இலங்கையின் நெற் சந்தையிலும் காணப்படுகின்றது. அதாவது உள்ளூர் விவசாயிகள் போட்டியிட முடியாத அளவு விற்பனையாளர்களினால் விலை குறைந்த அரிசி இறக்குமதி செய்யப்படும் பொழுது இந்நிலைதோன்றுகின்றது.

அதே நேரம் ஆக்க உரிமை (Patenting) என்ற விடயமும் வாத பிரதி வாதங்களுக்குட்பட்டதாகும். இதன் விளைவாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் மருந்துப் பொருட்கள், வாழ்க்கை பாதுகாப்பு என்பவற்றை விலை கொடுத்து வாங்கமுடியாத நிலை ஏற்படுகிறது.

இறுதியாக, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் ஊதியம் குறைந்த வேலையாட்களைக் கொண்டு பயனடைதல் என்ற விடயத்தினால் ஊழியம் சுரண்டப்படும் நிலைமை ஏற்படும். மிகவும் வினைத்திறனான உற்பத்தி மற்றும் சிறந்த உற்பத்திகளுக்கான அமைப்பு ஊழியர்களின் உரிமைகளில் ஆபத்தை அதிகரிக்கச் செய்யும். உதாரணமாக, ஆடைத் தயாரிப்பு கைத்தொழில் / ரெடிமார்ட் ஆடைத் தயாரிப்பு காரணமாக இலங்கையில் பெண் ஊழியப் படையினர் பல தொழில் வாய்ப்பு சந்தர்பங்களைப் பெற்றுள்ளனர். வேலை நேரம், விடுமுறைகள், சுகயீன விடுமுறை, தொழிலிட சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு விவகாரங்கள் என்பன தொடர்பாக தேசிய தொழில் சட்டங்கள் மீறப்படுதல் போன்ற நிகழ்வுகள் சில தொழிற்சாலைகளில் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. இன்னுமொரு வகையில் நோக்கும் பொழுது, ஊழியர்கள் சுரண்டப்படும் நிலைமை விளக்கப்பட்டுள்ளதுடன், சமூகத்தில் சில ஊழியர் குழுக்கள் கொண்டிருக்கும் தொழில்வாய்ப்பில் கூடிய கவனம் செலுத்தவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. உதாரணமாக, குடும்பங்களைப் பிரிதல் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற பிரச்சினைகள் வெளிநாட்டு வேலைவாயப்புக்காக செல்வதனால் ஏற்பட்டுள்ளது.

**மனித உரிமைகளுக்கான அந்தஸ்தினை மேம்படுத்துதல்**

வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி கலந்துரையாடல் மற்றும் பேச்சுவார்த்தையுடன் மனித உரிமைகளுக்கான அந்தஸ்தினை மேம்படுத்துவது உலகம் முழுவதிலும் ஸ்திரத் தன்மையை ஏற்படுத்துகின்றது. இலங்கையில் முதலாவது, வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான மனித உரிமைகள் கண்ணோட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் இரண்டாவது, சிறந்த வாழ்க்கைத் தரத்தினைக் கோருவதற்கு மக்களை தூண்டுவதற்கும் பல செயற்பணிகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது.

சர்வதேச வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் தற்போது பிராந்திய மற்றும் இருதரப்பு வர்த்தக உடன்படிக்கைகள் என்பவற்றின் நீதியற்ற தன்மை, அவை பாதிக்கப்பட்ட குழுக்கள் மீது ஏற்படுத்தும் அபாயகரமான தாக்கங்கள் என்பன தொடர்பாக பல சிவில் சமூக அமைப்புக்கள் செயற்பட்டு வருகின்றன.

அண்மைக்காலமாக சட்டத்திற்கும் சமூகத்திற்குமான அறநிலையம் வர்த்தக நீதம் தொடர்பான பரிந்துரைகளைத் தேடிவருவதுடன் ''வர்த்தகம், அபிவிருத்தி மற்றும் வறுமைத் தணிப்பு என்பவற்றுக்கிடையிலான தொடர்புகள்'' என்ற பிரசார வெளியீடொன்றின் மூலமும் ஜுலையில் கொழும்பில் இடம்பெறவிருக்கும் சார்க் மக்கள் அஸ்சம்லி மற்றும் இலங்கையில் இடம்பெறவுள்ள உலக சமூக மன்றம் - 2008 போன்ற சமூக நீதி முன்னெடுப்புகளிலும் செயலமர்வுகளிலும் பங்கெடுப்பதன் மூலமும் சம்பந்தப்பட்ட அமைப்புக்கள் மற்றும் தனிப்பட்டவர்களின் ஆர்வத்தினைக் கொண்ட வலையமைப்பொன்றினைக் கட்டி எழுப்புகின்றது.